# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 308/மா/2023**
**நாள்: 22.11.2023**

திரு. R. செந்தில்குமார்,
திருச்சிராப்பள்ளி . – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
வார்டு IV அலுவலகம்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

திருச்சி மாவட்டம், முத்தரசநல்லூர் போஸ்ட், பழுர் கிராமம், மீனாட்சி நகர், 19/3 என்ற முகவரியில் வசிக்கும் திரு. R. செந்தில்குமார் என்பவரின் 8.10.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 09.10.2023–ல் பெறப்பட்டு 308/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரது முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருச்சி மாவட்டம், முத்தரசநல்லூர் போஸ்ட், பழுர் கிராமம், மீனாட்சி நகர், 19/3 என்ற முகவரியில் வசிக்கும் திரு. R. செந்தில்குமார் என்பவரின் 8.10.2023 நாளிட்ட மனுவில்:-

"திருச்சி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் IV, வார்டு – 61, புல எண்.348/1A, 0.70 செண்ட் நிலத்தில் உரிய கட்டிட அனுமதி எதுவும் பெறாமல் மாநகராட்சி அதிகாரிகளுக்கு லஞ்சத்தை கொடுத்து சட்ட விரோதமாக சொகுசு பங்களாவை திரு. சேவியர் என்பவர் கட்டி உள்ளார். மேலும் சேவியர் அவர்கள் பொது பணித்துறையில் செயற்பொறியாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்.

மேலும் சேவியர் அவர்களுக்கு சொந்தமான காலி மனையுடன் கூடிய வீட்டிற்கு உரிய வரியை நிர்ணயம் செய்யாமல் குறைந்த மதிப்பில் நிர்ணயம் செய்து உள்ளனர். இது தொடர்பாக உரிய விசாரணை செய்து நடவடிக்கை எடுக்குமாறு, பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

**2. இம்முறைமன்ற கடித நாள் 17.10.2023 வாயிலாக திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவி ஆணையரிடமிருந்து இம்மனுவின் மீதான அறிக்கை கோரப்பட்டது. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவி ஆணையாளர் தன்னுடைய 14.11.2023 நாளிட்ட அறிக்கையில் :**

மனுதாரர் குறிப்பிட்டுள்ள SF No.348/1A1, நங்கவரம் தோட்டத்தில் உள்ள இடத்திற்கு காலிமனை வரிவிதிப்பு மற்றும் சொத்துவரிவிதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டது தொடர்பாக கீழ்கண்டவாறு விபரங்கள் சமர்ப்பிக்கப்படுகிறது.

பட்டியல்

| வ. எண் | வரிவிதிப்பின் தன்மை | சதுர அடிகள் | வருடம் | அரையாண்டு வரித்தொகை ரூ. | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1. | காலிமனை வரிவிதிப்பு எண்.086/035/ 05242 | 9592 | 6 மாதத்திற்கு 13அரையாண்டிற்கு (2011–2012 (II) முதல் 2017-2018 (II) வரை) | 3121/– (13அரையாண்டு களுக்கு மொத்தம் =40,573/-) | |
| 2. | சொத்து வரிவிதிப்பு எண்.086/061/ 904797 | 3600 | அரையாண்டிற்கு 2017–2018 (II) முதல் | அரையாண்டு வரி ரூ.5497/– + அபராத கட்டணம் ரூ.1872/- கூடுதல் ரூ.7369/-<br><br>மேற்படி வரியானது 2022-2023 1 முதல் சொத்துவரி சீராய்வின் போது அரையாண்டு ரூ.10994+1872 ஆக உயர்த்தப் படுகிறது. | காலிமனை வரி நீக்கம் செய்யப்பட்டு குடியிருப்பு கட்டிடம் (RCC) (3600 ச.அடி அனுமதியின்றி கட்டப்பட்டமைக்கு அபராத கட்டணமாக சொத்துவரியுடன் சேர்த்து அரையாண்டிற்கு ரூ.1872/- வசூலிக்கப்பட்டு வருகிறது) |

மேலும், திரு. S.A. சேவியர் என்பவர் பழைய வார்டு எண்.35 புதிய வார்டு எண்.61ல் உள்ள நங்கவரம் தோட்டம், ரேஸ்கோர்ஸ் ரோட்டில் அமைந்துள்ள இடத்திற்கு மனுதாரர் வழங்கிய பத்திரத்தில் உள்ள 9,592 சதுர அடிக்கு பத்திரத்தின் அடிப்படையில் அரையாண்டு காலிமனை வரி ரூ.3,121/- விகிதம்படி 13 அரையாண்டுகளுக்கு காலிமனைவரி ரூ.40,573/-ஐ சொத்தின் உரிமையாளரால் செலுத்தப்பட்டது.

பின்னர் மேற்கண்ட காலிமனையில் 3600 சதுர அடியில் கட்டப்பட்ட வீட்டிற்கு அரையாண்டிற்கு ரூ.7,369/- (அரையாண்டு வரி ரூ.5,497/- மற்றும் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடத்திற்கு அபராதத் தொகை அரையாண்டிற்கு ரூ.1,872/-) விதிக்கப்பட்டது.

தொடர்ந்து சொத்துவரி சீராய்வின்போது 2022-2023 முதலாம் அரையாண்டிலிருந்து ரூ.12,866/- (அரையாண்டு வரி ரூ.10,994/- மற்றும் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடத்திற்கு அபராதத் தொகை அரையாண்டிற்கு ரூ.1,872/- உயர்த்தப்பட்டுள்ளது.

அனுமதியின்றி அனுமதியின்றி கட்டிடம் கட்டப்பட்டதற்கு கட்டிட உரிமையாளரின் மீது திருச்சிராப்பள்ளி நீதிமன்ற நடுவர் எண்.II-ன் மூலம் குற்றத்தாள் வழங்கப்பட்டு 10.07.2018-ம் தேதியில் அபராத கட்டணம் ரூ.1500/- செலுத்தியுள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

**3. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 15.11.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 6.11.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 15.11.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகவில்லை.

**திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவி வருவாய் அலுவலர் 15.11.2023 அன்று நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.**

> "மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள திருச்சிராப்பள்ளி மாவட்டம் வார்டு அலுவலகம் IV நங்கவரம் தோட்டத்தில் உள்ள இடத்தில் கட்டப்பட்ட கட்டடம், அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டடமாகும். 2018ல் கட்டப்பட்ட மேற்கண்ட கட்டடத்திற்கான சொத்து வரியும், காலிமனை வரியும் மாநகராட்சியால் வசூலிக்கப்பட்டுள்ளன. அனுமதி பெறாமல் கட்டப்பட்ட மேற்கண்ட கட்டடத்திற்கான அபராதத்தை நீதிமன்றத்தில் கட்டட உரிமையாளரால் செலுத்தப்பட்டுவிட்டது என்கின்ற விவரத்தை தெரிவித்து, கட்டட உரிமைபாளரிடம் வசூலிக்கப்பட்ட சொத்து வரி தொடர்பான விவரங்கள் அடங்கிய திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவி ஆணையரின் 14.11.2023 நாளிட்ட கடிதத்தை இம்முறை மன்றத்தில் சமர்ப்பித்து அதில் உள்ள விவரங்களையும் எனது வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**5. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் மாநகராட்சி உதவி வருவாய் அலுவலரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் தெரியவருகின்றன:**

மனுதாரர் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலம் IV, வார்டு 61, புல எண்.348/1A, 0.70 செண்ட் நிலத்தில் மாநகராட்சி அனுமதியில்லாமல் சொகுசு பங்களாவை திரு. சேவியர் கட்டியுள்ளார் என்றும், மேலும் அன்னாருக்கு சொந்தமான காலிமனையுடன் கூடிய வீட்டிற்கு உரிய வரியை நிர்ணயம் செய்யாமல் குறைத்து மதிப்பீடு செய்து வரி விதித்துள்ளனர் என்றும், எனவே இது குறித்து உரிய விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் திரு. செந்தில்குமார் இம்முறைமன்றத்திற்கு புகார் மனு அளித்துவிட்டு, அதன் தொடர்ச்சியாக 15.11.2023 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டும், எவ்வித தகவலும் தெரிவிக்காமல், இம்முறைமன்றத்திற்கு விசாரணைக்கு ஆஜராகாமல் இருந்தது, இம்முறைமன்றத்தை அவமதிக்கும் செயல் என்று இம்முறைமன்றம் கருதுகிறது.

மனுதாரர் குறிப்பிட்ட புல எண் 348/1Aல் உள்ள காலிமனைக்கு 2011–2012 (ii) முதல் 2017–2018 (ii) வரை 6 மாதத்திற்கு ரூ.3,121 வீதம் 13 அரையாண்டுகளுக்கு 40,573/- வரி விதிக்கப்பட்டுள்ளது என்றும், குடியிருப்பு கட்டடத்திற்கு ஒரு அரையாண்டிற்கு ரூ.5497/–+ அபராத கட்டணம் ரூ.1872/- ஆக மொத்தம் ரூ.7369/- ,2017-2018 (ii) முதல் வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது என்றும், இந்த வரியானது 2022-2023 (i) முதல் சொத்துவரி சீராய்வின்போது அரையாண்டுக்கு ரூ.10,994/- +1872/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது என்றும், புல எண்.348/1A ன் கட்டட உரியைாளருக்கு அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டடத்திற்கு குற்றத்தாள் வழங்கப்பட்டு திருச்சிராப்பள்ளி நீதிமன்றம் மூலம் ரூ.1500/- அபராதத் தொகை கட்டியுள்ளார் என்றும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு அலுவகம் 4ன் உதவி ஆணையரின் அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும், வார்டு 61, புல எண். 348/1A-ல் கட்டப்பட்ட கட்டடம் 2018-ஆம் ஆண்டு கட்டப்பட்டது என்றும், அக்கட்டடத்திற்கு சொத்துவரியும், காலிமனை வரியும்

வசூலிக்கப்பட்டுள்ளது என்றும் திருச்சிராப்பள்ளி உதவி வருவாய் அலுவலர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்ட திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலம் IV, வார்டு 61, புல எண். 348/1A, 0.70 செண்ட் நிலத்தில் மாநகராட்சி அனுமதியில்லாமல் கட்டப்பட்ட கட்டடத்திற்கு திருச்சிராப்பள்ளி மாநகராட்சியால் கட்டட உரிமையாளருக்கு குற்றத்தாள் வழங்கி திருச்சிராப்பள்ளி நீதிமன்றத்தின் மூலம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு அலுவலகம்-4ன் அலுவலர்கள் Tamil Nadu Town and Country Plan Act 1971ன்படி தாக்கீதுகள் வழங்கி அதன் தொடர்ச்சியாக தேவையான அமலாக்க நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். அவ்வாறு நடவடிக்கை எடுக்காதது திருச்சிராப்பள்ளி வார்டு குழு அலுவலகம்–4ன் அலுவலர்கள் தங்கள் கடமையில் இருந்து தவறிவிட்டதாக இம்முறைமன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது. சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கத் தவறிய செயல் மிகவும் வன்மையாக கண்டிக்கத்தக்கது ஆகும்.

2014-ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் மற்றும் விதிகளில், குறிப்பாக:-

<u>பிரிவு 7</u> The Ombudsman shall perform all or any of the following functions, namely-

(i) enquire into any written complaint from the Government or that has come to the notice of the Ombudsman in which corruption or maladministration of a public servant or a local body is alleged;

(ii) Pass an order on the proved allegation in the following manner, namely-

(a) xxxx

(b) xxxx

(c) where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules

மற்றும்

<u>பிரிவு 12</u> (1) The ombudsman may consider and dispose of complaints other than those involving criminal offences, in the following manner, namely-

(a) x x x x

(b) x x x x

(c) refer the complaint to the appropriate authority to take disciplinary action for wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body.

(d) x x x x

(e) x x x x

அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் இம்முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலம் IV, வார்டு 61, புல எண் 348/1A-ல் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டடத்திற்கு Tamil Nadu Town and Country Plan Act 1971ன்படி தாக்கீதுகள் வழங்கி அதன் தொடர்ச்சியாக தேவையான அமலாக்க நடவடிக்கை எடுக்காத திருச்சிராப்பள்ளி வார்டு குழு அலுவலகம்-4ன் சம்மந்தப்பட்ட முன்னாள் மற்றும் இந்நாள் அலுவலர்களின் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறும் அவ்வாறு எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து இம்முறைமன்றத்திற்கு 45 தினங்களுக்கு அறிக்கை அளிக்குமாறு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

மேலும் மனுதாரர் புகார் மனு அளித்துவிட்டு, இம்முறைமன்றத்தால் நேரடி விசாரணைக்கு அழைப்பாணை அனுப்பப்பட்ட நிலையில், எவ்வித காரணமுமின்றி விசாரணைக்கு ஆஜராகாமல் இருந்தது இம்முறைமன்றத்தை அவமதிக்கும் செயலாக கருதி, மனுதாரரால் அளிக்கப்படும் மனுக்கள் மீது அடுத்த ஆறு (6) மாதத்திற்கு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாது என்று இம்முறைமன்றம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2023-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 22-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. R. செந்தில்குமார்
19/3, மீனாட்சி நகர்,பழூர் கிராமம்,
முத்தரச நல்லூர் போஸ்ட், திருச்சி – 620 101.
2. ஆணையர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
பாரதிதாசன் சாலை, கண்டோன்மெண்ட்,
திருச்சிராப்பள்ளி – 620 001.
3. உதவி ஆணையர்,
வார்டு குழு அலுவலகம் -4,
பொன்மலை மண்டலம்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
4. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.
5. இணை இயக்குநர் ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்